**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 22-04-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-04-22 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-04-23 | 2022-04-24 | 2022-04-25 | 2022-04-26 | 2022-04-27 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 38.0 | 38.0 | 39.0 | 39.0 | 39.0 |
| டிமின் (° C) | 28.0 | 28.0 | 28.0 | 28.0 | 28.0 |
| RH I (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| RH II (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கிமீ) | 8.0 | 8.0 | 8.0 | 8.0 | 8.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 110 | 110 | 140 | 140 | 140 |
| மேகக்கணி (ஆக்டா) | 4 | 4 | 3 | 3 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களில் மழை பெய்ய வாய்ப்பில்லை. அதிகபட்ச வெப்பநிலை 39.0°C - 38.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்பநிலை 28.0°C வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஓரளவு மேகமூட்டமான வானம் எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகம் மணிக்கு 08 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : ஏப்ரல் 27முதல் மே 3 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்பிற்கு கீழே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பிற்கு மேல் மிதமானது இருக்கும்

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் அதிகபட்ச வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் வெப்ப அலை பரவலாக உணரப்படும். எனவே கால்நடைகளை பகல் நேரங்களில் புல் மேய் அனுமதிக்க வேண்டாம்.

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தேங்காய் | தென்னையில் காண்டாமிருக வண்டு தாக்கம் தென்படுகிறது .இதனை கட்டுப்படுத்த வயது முதிர்ந்த இலைகளை நீக்கிவிட்டு ஒரு மரத்திற்கு 3 முதல் 4 பூச்சி உருண்டைகளை இடவும் . பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை அதிகமாக இருப்பதால் தென்னை மரம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் தண்ணீரை சொட்டுநீர் முறையில் பாசனம் செய்யவும். |
| மரவள்ளிக்கிழங்கு | தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பரிந்துரைக்கப்பட்ட 500 லிட்டர் தண்ணீரை மாலை வேளையில் வாரத்திற்கு இரண்டு முறை தெளிப்பதன் மூலம் மரம் புத்துயிர் பெற முடியும் . |
| வாழை | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக வாழைப் பயிரில் முடிக்கொத்து நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் ஆரம்பத்தில், கரும்பச்சைக் கோடுகள் இலையின் மைய நரம்பு பகுதி மற்றும் இலைதண்டு நரம்புகளில் தோன்றும். புதிய இலைகள் பிற இலைகளைவிட குறுகலானதாக இருக்கும். இலையின் ஓரங்களில் மஞ்சள்நிறம் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த 3 முதல் 7 மாத வயதுடைய வாழை மரத்திற்கு ஒரு மரத்திற்கு 1மில்லி என்ற அளவில் பிப்ரோனில் மருந்தினை மரத்தின் தண்டுகளில் ஊசி மூலம் 45 நாட்கள் இடைவெளியில் செலுத்த வேண்டும். |
| மாம்பழம் | மா மரத்தில் பிஞ்சு கொட்டாமல் தடுத்து நல்ல மகசூல் பெற மா நுண்ணூட்டக் கலவையை லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் செம்பு மற்றும் எலுமிச்சை சாறுடன் கலந்து இலை வழி தெளிப்பு செய்ய வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | நிலவும் வானிலையின் உஷ்ண காற்றின் ஈரப்பதம் குறியீடு 72 மேல் காணப்படுவதால் கால்நடைகளுக்கு வெப்ப அயர்ச்சி ஏற்படும். கால்நடைகளுக்கு வெப்ப அயர்ச்சி ஏற்படும். ஆகவே கால்நடைகளை தினமும் குளிப்பாட்டி மேலும் கால்நடை கொட்டைகளை குளிர்ச்சியாக்க தெளிப்பான் மூலம் நீர் தெளிக்கவும் . |
| பசு | வெப்பமான மற்றும் வறண்ட காலங்களில் நில் வலைகளை (Shade Nets or Shade frames) நிழல் 25-50 சதவிகிதம் பயன்படுத்துவதால் சூரிய ஒளி மற்றும் வெப்பநிலை தாக்கத்தையும் குறைக்கலாம். அதிக நிழல் 50 சதவீதத்துக்கு மேல் இருந்தால் அடுத்த பருவத்தில் காய் பிடிக்கும் திறனை குறைத்துவிடும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக் | கோழிகளுக்கு வாரம் தோறும் சனிக்கிழமைகளில் RDVK அனைத்து கால்நடை மருத்துவமனையில் போடப்படுகிறது எனவே விவசாயிகள் இதனை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. |

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக் | சூடான மற்றும் வறண்ட வானிலையின் தாக்கத்தை கட்டுப்படுத்த கோழிக் குடியில்களை ஈர கோணிப்பைகளை கொண்டு மூடவும்.மேலும் கோழிகளின் வெள்ளை கழிச்சல் நோய் வராமல் அருகிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மண் சோதனை | சம்பா ,தாளடி நெல் சாகுபடியைத் தொடர்ந்து உளுந்து ,எள் மற்றும் ஏனைய வேளாண்பயிர்கள் அறுவடை முடிந்து நிலத்தைத் தரிசாக வைத்திருக்கும் விவசாயிகள் சாகுபடி செய்யும் வயல் மண்ணை பரிசோதனை செய்துகொள்ள இதுவே சரியான நேரம் . பயிருக்கு தேவையான அளவை அறிந்து உரமிடுதல், மண்ணில் உள்ள களர், உவர் அமிலத்தன்மைகளை அறிந்து சீர்திருத்தம் செய்ய மண் பரிசோதனை மிகவும் அவசியம் கோடை காலத்தில் பயிர் இல்லாத தருணத்தில் மண் மாதிரியை எடுப்பது சிறந்தது. |